**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்.**
**முன்னிலை: திருமதி. ஆர். லதா, எம்.ஏ., எம்.எல்.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, சிதம்பரம்.**
**2017-ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 27 ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**அசல் வழக்கு எண்.252-2009**

Dr. பழநியப்பன் **....வாதி**

**-எதிர்-**

1. பாலசுப்ரமணியன்
2. ராஜ்குமார்
3. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், சிதம்பரம்.

**...பிரதிவாதிகள்**

இவ்வழக்கு என் முன்னர் 21.06.2017-ம் தேதியன்று இறுதியான விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு. ஏ. சம்பந்தம், அவர்கள் முன்னிலையாகியும், 1 ஆம் பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.ஏ.ராமசாமி அவர்கள் முன்னிலையாகியும், 2 ஆம் பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.ஏ.கே.நடனம் அவர்கள் முன்னிலையாகியும், 3-ம் பிரதிவாதி தோன்றாதரப்பினராக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலணைக்குட்பட்டு இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.

## தீர்ப்புரை

அசல் வழக்கானது 1-வது இன வழக்குச் சொத்தில் வாதிக்குள்ள சுவாதீன அனுபவ உரிமையை 1, 2 பிரதிவாதிகளோ அல்லது அவர்களது ஆட்களோ, முகவர்களோ, அல்லது அவரின் மூலம் அதிகாரம் மற்றும் உரிமை பெற்றவர்களோ எவ்வகையிலும் இடையூறோ அல்லது தடையோ செய்யக் கூடாது என்றும், வழக்கு சொத்தில் பிரவேசிக்கக் கூடாது என்றும், தடை செய்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும்,

2-வது இன வழக்குச் சொத்து வாதிக்கு உரிமையானது என விளம்புகை செய்தும், அதன் பின்பயனாக வழக்கு 2-வது இனச் சொத்தில் பிரதிவாதிகளோ அல்லது அவர்களது ஆட்களோ. முகவர்களோ, அவரின் மூலம் அதிகாரம் மற்றும் உரிமை பெற்றவர்களோ வழக்கு சொத்தில் பிரவேசிக்கக் கூடாது என்றும் வாதியின் சுவாதீன அனுபவ உரிமையை எவ்வகையிலும் இடையூறோ, தடையோ செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும், வழக்கின் செலவுத் தொகைக் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) வாதியின் வழக்குரை சுருக்கம்:</u>**

இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் அடங்கிய புல எண் 103-1பி, 103-3 ஆகிய நிலங்கள் ஆதியில் சிதம்பரம், அண்ணாமலை நகரில் இயங்கி வந்த முத்தையா நகர் வீடு கட்டும் சங்கத்தால் கிரயம் பெறப்பட்டு, பின்பு அதில் முத்தையா நகர் அமைக்க நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் செங்கல்பட்டு அவர்களிடம் மனைப் பிரிவு அனுமதியும் பெறப்பட்டுள்ளது. வாதி மேற்படி வீடு கட்டும் சங்கத்தில் உறுப்பினராக இருந்து வந்துள்ளார். அப்போது வழக்கு 1-வது அட்டவணையில் விவரிக்கப்பட்ட சொத்தினை வாதி 02.05.1987 தேதியிட்ட ஒரு பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் மூலம் மேற்படி சங்கத்தின் தலைவரிடம் இருந்து கிரயம் பெற்றுள்ளார். வழக்கு 1-வது இனச் சொத்துக்கு மேல்புறத்தில் புல எண் 103-1ஏ-ல் மேற்படி முத்தையா நகர் வீடு கட்டும் சங்கத்திற்கு பாத்தியமான இடத்தில் 1990 ம் வருடத்தில் மேற்படி சங்கத்தால் முத்தையா நகர் அனெக்ஸ் -XII என்ற மனைப் பிரிவு உருவாக்கப்பட்டு அதற்கு பரங்கிப்பேட்டை பஞ்சாயத்து யூனியனில் 31.10.1990-ல் அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது. வாதி முதலில் கிரயம் பெற்ற வழக்கு 1-வது அட்டவணை சொத்தின் மனையின் தென்புற அளவு குறைவாகவும் மனை குறுகலான அமைப்புடனும் இருந்ததால், அந்த சொத்திற்கு அடுத்து மேல்புறம் உள்ள மேற்படி முத்தையா நகர் அனெக்ஸ், மனை எண்.3-ஐ கிரய பெறுவதன் மூலம் வழக்கு 1-வது அட்டவணை சொத்தான மனையின் அமைப்பை ஒழுங்கு செய்யும் எண்ணத்துடன் வாதி வழக்கு 2-வது அட்டவணை சொத்தினை கடந்த 17.06.1992 தேதியிட்ட ஒரு கிரய பத்திரம் மூலம் முத்தையா நகர் வீடு கட்டும் சங்கத்தின் தலைவரிடம் இருந்து கிரயம் பெற்றுள்ளார். கிரயம் பெற்ற தேதியிலேயே 2- வது அட்டவணை சொத்தின் சுவாதீனம் வாதியிடம் கொடுக்கப்பட்டு அது முதல் அவர் அதன் சுவாதீனத்தில் இருந்து வருகிறார். வாதி மேற்கண்டவாறு கிரயம் பெற்ற வழக்கு 1,2 அட்டவணை சொத்துக்களை ஒரே மனையாக சேர்த்து அதன் நான்கு பக்கங்களிலும் கருங்கல் தூண் நட்டு முள்கம்பி வேலி அமைத்து கிரய தேதி முதல் இன்று வரை தொடர்ந்து அனுபவித்து வருகிறார். வழக்கு 2-வது அட்டவணை சொத்துக்கும் மேல்புறம் உள்ள மனைகளை வேறு நபரிடம் கிரயம் பெற்றுள்ளதாகவும், அவர்கள் கிரயம் பெற்றுள்ள சொத்தின் அளவுகள் குறைவாக உள்ளது என்று கூறி வாதியிடம் வழக்கு சொத்தில் உள்ள முள் கம்பி வேலியை பிரிக்குமாறு கூறினார்கள். 22 ஆண்டுகளாக தன் கிரயப் பத்திர அளவுகளின்படிதான் அனுபவித்து வருவதாகவும், அதனால் வழக்கு சொத்துக்களில் உள்ள வேலியை அகற்ற முடியாது என தெரிவித்துள்ளார். உடன் 1, 2 பிரதிவாதிகள் சிதம்பரம் வட்டாட்சியரிடம் வழக்கு சொத்துக்கள் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் கிரயம் பெற்றதாக கூறும் சொத்துக்களையும் அளக்குமாறு மனு கொடுத்தனர். அதன்படி சிதம்பரம் வட்டாட்சியர் கடந்த 22.09.2009 அன்று புல எண்.103-1ஏ-ல் அமைக்கப்பட்ட முத்தையா நகர் அனெக்ஸ் முழுவதையும் நில அளவையர் உதவியுடன் அளவு செய்தார். அவ்வாறு அளவு செய்ததில் வாதி வழக்கு சொத்துக்களை கிரயம் பெற்ற மேற்படி கிரயப் பத்திரங்களின்படியும், அனுபவப்படியும் சரியாக இருந்தது. அதன் பின்னர் இந்த 1. 2 பிரதிவாதிகள் அவர்களது அரசியல் செல்வாக்கினை

பயன்படுத்தி அவர்கள் கிரயம் பெற்றதாக கூறும் சொத்திற்கும், வழக்கு 2-வது அட்டவணை சொத்திற்கும் சேர்த்து தனிப் பட்டா பெற 3-ம் பிரதிவாதியை அணுகி முயற்சி செய்து வருகிறார்கள். 1,2 பிரதிவாதிகள் இவ்வாறு சட்ட விரோதமாக நடக்க முயற்சிப்பதால் அவர் முன்னிலையில் தீர்ப்பாணை பெறவும், வாதிக்கு தெரியாமல் நில அளவையர் பதிவேடுகளில் வாதியின் கிரய அளவுக்கு முரணாக வேறு பதிவுகள் ஏதும் ஏற்படுத்தாமல் இருக்கவும், 3-ஆம் பிரதிவாதியும் இதில் ஒரு தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். அவரைப் பொறுத்து தனிப் பரிகாரம் ஏதும் கோரவில்லை. வாதி அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் வேதியியல் துறையில் தலைமை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறார். இந்த 2-ம் எதிர்வாதி தன் எதிர் வழக்குரையில் வழக்கு 2-வது இனச் சொத்தினை மனை எண்.357ஏ-ஐ 04.12.1987-ல் முத்தையா நகர் சங்கத் தலைவரிடமிருந்து இளங்கோவன் என்பவர் கிரயம் பெற்று பின்னிட்டு அவரிடமிருந்து 14.08.2003-ல் தான் கிரயம் பெற்று தொடர்ந்து முள்வேலி வைத்து அனுபவித்து வருவதாகவும், எனவே வாதிக்கு உரிமை இல்லை என்றும் வாதியின் உரிமை மூலத்தை மறுத்துள்ளதால் 2-வது இனச் சொத்து பொருத்து வழக்குரையில் விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 1,2 இனச் சொத்துக்களில் வாதிக்குள்ள உரிமை மற்றும் அனுபவம் சட்டப்படியானதாகும். ஆகவே, வாதி கோரியவாறு இவ்வழக்கை அனுமதிக்க வேண்டும் என்று வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>2) 1 ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யும் எதிர் வழக்குரையின் சுருக்கம்:-</u>**

எதிருரையில் வாதி தரப்பில் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றும், குறிப்பாக, பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மறுத்தும், இவ்வழக்கானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்று என ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, முத்தையா நகர் வீடு கட்டும் சங்கம் சர்வே எண்.103-1பி மற்றும் சர்வே எண்.103-ல் ஓர் மனை பிரிவை ஏற்படுத்தினர் என்பது உண்மையே. 17.06.1992-ம் தேதியிட்ட கிரயப் பத்திரத்தை 1-ம் பிரதிவாதி குறிப்பாக, ஆட்சேபணை செய்தும், வழக்கு 1-ம் இன சொத்தானது முத்தையா நகர் வீடு கட்டும் சங்கத்திற்கு கிழக்கில் உள்ளது. 1-ம் இனச் சொத்திற்கு கிழக்கில் சர்வே எண். 103-1ஏ மற்றும் 103-3 உள்ளது. அதில் நான்கு தனித்தனியான 2800 சதுரடிக் கொண்ட மனைகள் உள்ளன. அதன் தொடர்ச்சியாக மனை எண்-357 உள்ளது. அந்த 4 மனைகளும் ஏ,பி,சி,டி என பிரிக்கப்பட்டுள்ளது. முத்தையா வீடு கட்டும் சங்கத்தால் மனை எண்.357-ஏ அதன் அடுத்த மனை எண்.357 இளங்கோவன் என்பவருக்கு கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது. அவர் அதனை ராஜ்குமார் மற்றும் 2-ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்துள்ளார். 2-ம் பிரதிவாதி மனை எண்.357ஏ-ன் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார். அந்த மனையானது 357பி-ற்கு கிழக்கிலுள்ள மனையை கங்காதரன் என்பவர் 25.11.1988-ல் கிரயம் பெற்றுள்ளார். அவரிடமிருந்து சந்தரமோகன் 12.07.1995-ல் 4 எல்லைகள் குறிப்பிட்டு கிரயம் பெற்றே அனுபவித்து வருகிறார். சந்திரமோகன் இறந்த பிறகு அவரது மனைவி

சாவித்திரி இளவர் மகள் இருவரும் சேர்ந்து மனை எண்.357பி-யை 1-ம் பிரதிவாதிக்கு 23.03.2009-ல் கிரயம் கொடுத்துள்ளனர். அது முதல் 1-ம் பிரதிவாதியின் அனுபவத்திலிருந்து வருகிறது. அந்த மனையானது மனை எண்.357ஏ-க்கு கிழக்கிலும், 357சி-க்கு மேற்கிலும் இடைப்பட்ட மனையாகும். மனை 357ஏ 2-ம் பிரதிவாதியின் அனுபவத்திலிருந்து வருகிறது. ஆகவே மனை எண். 357 மற்றும் மனை எண் 357பி-க்கும் நடுவிலுள்ள சொத்தானது 2-ம் பிரதிவாதியின் அனுபவத்திலுள்ளது. ஆகவே அதில் 1-ம் பிரதிவாதிக்கு எவ்வித தொடர்பும் இல்லை. வாதி 2-ம் பிரதிவாதியின் சொத்தில் தான் அத்துமீறி வேலியமைக்க முயற்சி செய்துள்ளார். அதற்கு எதிராக காவல் துறையில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 1-ம் பிரதிவாதி அவசியமற்ற தரப்பினர் என்றும், இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்ய வேணடும் எனவும் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

**<u>3) 2 ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யும் எதிர் வழக்குரையின் சுருக்கம்:-</u>**

வாதி தரப்பில் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றும், குறிப்பாக, பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மறுத்து இவ்வழக்கானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்று என ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, முத்தையா நகர் வீடு கட்டும் சங்கம் சர்வே எண்.103-1பி மற்றும் சர்வே எண்.103-ல் ஓர் மனை பிரிவை ஏற்படுத்தினர் என்பது பற்றி இந்த பிரதிவாதிக்கு எதுவும் தெரியாது. முத்தையா நகர் அனெக்ஸ் 12 பரங்கிபேட்டை பஞ்சாயத்தால் அளிக்கப்பட்ட அங்கீகாரத்தின் சட்டப்படியான செல்லுத்தன்மை, உண்மைத்தன்மை ஆகியவற்றை இந்த பிரதிவாதி ஒப்புக்கொள்ளவில்லை. 04.12.1987-ல் மனை எண்.357-ஏ என முத்தையா நகர் வீடு கட்டும் சங்கத்தின் தலைவரான இராஜதுரை என்பவரிடம் இருந்து இளங்கோவன் கிரயம் பெற்றுள்ளார். அந்த சொத்தானது மனை எண்.345-ற்கு வடக்கு, சாலைக்கு தெற்கு, மனை எண்-357-ற்கு மேற்கு, மீதியுள்ள முத்தையா நகருக்கு கிழக்கில் வீஸ்தீரணம் 2720 சதுர அடியும், கீழ்மேல் 40 அடியும், தென்வடல் 68 அடியும் ஆகும். கிரயம் பெற்ற நாள் முதல் இளங்கோவன் வேலியமைத்து அனுபவித்து வந்துள்ளார். அவரிடமிருந்து இந்த பிரதிவாதி 14.08.2003-ல் கிரயம் பெற்று அனுபவித்து வருகிறார். இளங்கோவன் கட்டியுள்ள வேலியை புதுப்பித்து இந்த பிரதிவாதி அனுபவித்து வருகிறார். இந்த பிரதிவாதி 357ஏ-ல் கட்டிடம் கட்டும் பொருட்டு அளந்துள்ளார். வாதி பிரதிவாதியை அணுகி அது அவருடைய சொத்தாக உரிமை கோரியுள்ளார். ஆகவே, சர்வேயர் கொண்டு சொத்து முழுவதும் அளக்கப்பட்டு பிரதிவாதியின் மனையானது மணை எண்.357-ற்கு மேற்கே உள்ளதாக குறிப்பிட்டும், வாதி அதில் பிரச்சினை செய்யும் பொருட்டு 3-ம் பிரதிவாதியிடம் மனு கொடுத்துள்ளார். அதன் விசாரணையிலும், மனை எண். 357-ற்கும் மேற்கில், வழக்கு 2-ம் இன சொத்து இல்லை என தெரியவருகிறது. ஆனால் வாதி சட்ட விரோதமாக வழக்கு சொத்தில் ஏற்கனவே பிரதிவாதியால் போடப்பட்டு இருந்த வேலியை அகற்றியுள்ளார். இது தொடர்பாக புகார் கொடுக்கப்பட்டு அதில் சமாதானமாக தீர்த்துக்கொள்ள வலியுறுத்தியுள்ளார். இந்நிலையில் வாதி நீதிமன்றத்தை அணுகி ஒருதலைபட்ச

இடைக்கால உறுத்துக்கட்டளை பெற்றுள்ளார். மற்ற சங்கதிகளை பொருத்து பொதுவாக ஆட்சேபித்து வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார்.

**4) 2 ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யும் கூடுதல் எதிர் வழக்குரையின் சுருக்கம்:-**

முத்தையா நகர் வீடு கட்டும் சங்கத்தால் அனெக்ஸ் 12-ல் மனை பிரிவு ஏற்படுத்தப்பட்டது என்பதை மறுத்தும் குறிப்பாக, வழக்கின சொத்திற்கு 1-ன் மேல்புரத்தில் பிளாக் பி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை மறுத்தும், 2-ம் இனச் சொத்து பிளாக் பி மனை எண்.3 ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது பொய்யானது என மறுத்தும், வழக்குரையில் 2-ம் இனச் சொத்தின் 4 எல்லையில் வழக்கு இன சொத்தின் 1-ன் மேல்புறம் தவறாக கொடுக்கப்பட்டுள்ளது என்பதை மறுத்தும், அவர் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2-ம் இன சொத்து வாதியின் அனுபவத்தில் இல்லை. 1,2 இன சொத்து ஓரே அங்கமாக உள்ளது என்பதை மறுத்தும், அதில் கிரானைட் தூண்களோ, வேலிகளோ அமைக்கப்படவில்லை என்றும், அதன் அளவுகளும் குறைவாக கொடுக்கப்பட்டுள்ளது என்றும், ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. மேலும் 2-ம் பிரதிவாதி வழக்கின சொத்திற்கு 1-ற்கு மேற்கில் உள்ள சொத்தில் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார். இந்த பிரதிவாதி அத்துமீறி அக்கிரமிப்பு செய்ததாக சொல்வது உண்மை அல்ல என்றும் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. மேலும், 2-ம் இன சொத்து நீதிமன்ற கட்டணத்தை பொருத்து முறையாக மதிப்பீடு செய்யவில்லை என்றும், 2-ம் இனச் சொத்தின் மதிப்பு சுமார் 3 லட்சமாகும். ஆனால் 1 லட்சம் என தவறுதலாக குறிப்பிட்டுள்ளதாலும் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், உண்மையான மதிப்பீடு செய்யப்பட்டால் இந்நீதிமன்றத்திற்கு விசாரிப்பதற்கான அதிகாரம் இல்லை என்றும், ஆட்சேபணை செய்தும் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூடுதல் எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**5) வனையப்பட்ட வழக்கெழு வினாக்கள்**

1. வழக்கு சொத்துக்கள் வாதியின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் உள்ளதா?
2. வாதி கோரியவாறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற வாதிக்கு உரிமையுள்ளதா?
3. வாதிக்கு கிடைக்க கூடிய வேறு பரிகாரங்கள் யாவை?

**6) வனையப்பட்ட கூடுதல் வழக்கெழு வினாக்கள்:-**

1. 1, 2 இன வழக்கு சொத்துக்களில் வாதிக் கோரியவாறு விளம்புகை பரிகாரம் பெற உரிமையுள்ளதா?
2. நீதிமன்ற கட்டணத்தை பொருத்து வழக்கு சொத்து முறையாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா?
3. இந்நீதிமன்றத்திற்கு இவ்வழக்கை விசாரிக்க அதிகாரம் உள்ளதா?

**7)** இவ்வழக்கில் வாதியின் தரப்பில் வா.சா.1 முதல் 4 விசாரிக்கப்பட்டும், அவர் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் 21 சான்றாவணங்கள் குறியீடு செய்தும், பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 முதல் 3 விசாரிக்கப்பட்டு, அவர் தரப்பில் பி.வா.சா.ஆ.1 முதல் 8 சான்றாவணங்கள் குறியீடும் செய்யப்பட்டுள்ளன.

**<u>8) வழக்கின் பரிகாரம்</u>**

அசல் வழக்கானது ஆதியில் வாதியின் அனுபவத்திலுள்ள 1, 2 இன வழக்கு சொத்துக்களில் இடையூறு செய்யகூடாது என 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் பின்னிட்டு 2 ஆம் இன வழக்கு சொத்தில் வாதிக்குள்ள உரிமையை விளம்புகை செய்யக்கோரி வழக்குரையை திருத்தம் செய்தும், வாதி கோரியவாறு பரிகாரம் வழங்க கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>9) சொத்து விபரம்</u>**

**<u>1வது அட்டவணை சொத்து</u>**

சிதம்பரம் ரிடி., சிதம்பரம் சப் ரிடி., சிதம்பரம் தாலுக்கா, சி. கொத்தங்குடி கிராமத்தில் நஞ்சை R.S.No.103/1B, 103/3-ல் முத்தையா நகர், பிளாட் எண்.357---2800 சதுரடி காலிமனைக்கு

சக்குபந்தி:- முத்தையா நகர் இடத்துக்கும் (2வது அட்டவணை சொத்து) கிழக்கு,
30 அடி ரோட்டுக்கும் தெற்கு,
பிளாட் என்.356-க்கு மேற்கு,
பிளாட் எண்.346-க்கு வடக்கு
இதில் கீழ்மேல் ஜாதியடி வடபுரம் 52 அடி, தென்பரம் 28 அடி
தென்வடல் ஜாதியடி கீழ்புரம் 70 அடி, மேல்புரம் 70 அடி.

**<u>2வது அட்டவணை சொத்து</u>**

சிதம்பரம் ரிடி., சிதம்பரம் சப் ரிடி., சிதம்பரம் தாலுக்கா, சி.கொத்தங்கடி கிராமத்தில் நஞ்சை R.S.V.103/1A-ல் முத்தையா நகர் அனெக்ஸ் XII Block "B" பிளாட் எண்.3-3587 1/2 (8.22 செண்ட்) சதுரடி காலிமனைக்கு

சக்குபந்தி:-
பிளாட் எண்.4க்கு கிழக்கு,
முத்தையா நகருக்கு (1வது அட்டவணை சொத்துக்கு) மேற்கு,
நகர் 30 அடி சாலைக்கு தெற்கு,
முத்தையா நகருக்கு வடக்கு -
இதில் கீழ்மேல் ஜாதியடி வடபுரம் 47 1/2 அடி, தென்புரம் 55 அடி

தென்வடல் ஜாதியடி கீழ்புரம் 70 அடி, மேல்புரம் 70 அடி என வழக்குலையில் குறிப்பிட்டுள்ளது.

**10) நிரூபிக்கும் சுமை**

உரிமையியல் வழக்குகளை பொறுத்தவரை வழக்கை தாக்கல் செய்த வாதி அதனை முதல்நிலையில் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். இவ்வழக்கை பொருத்தவரை வழக்குச் சொத்தில் வாதிக்குள்ள உரிமை மூலத்தை நிரூபித்தும், 1, 2 இனச் சொத்துக்களில் வாதியின் சட்டப்படியான அனுபவத்தையும், நிரூபிக்க வேண்டும். அவ்வாறு நிரூபிக்கும்பட்சத்தில் வாதியின் வழக்கை பொய்ப்பித்து வழக்கை நிரூபிக்க வேண்டியது பிரதிவாதிகளின் கடமையாகும். அதே சமயத்தில் வழக்கில் பிரதிவாதி அவரது எதிர்வாதத்தை நிரூபிக்க தவறியதாலோ, பிரதிவாதி நிரூபிக்கவில்லை என்பதற்காகவோ, வாதியின் வழக்கு நிரூபிக்கப்பட்டதாக எடுத்துக்கொள்ள முடியாது என்பது இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 101 ல் பொதுவான சட்ட நிலைபாடாகும்.

**11) 1 ஆம் இன சொத்திற்கான வழக்கறிஞர்களின் வாதங்களும் சாட்சிய நிரூபனங்களும்**

வழக்கு சொத்துக்கள் அடங்கிய புல எண் 103-1பி, 103-3 ஆகிய நிலங்கள் முன்பு சிதம்பரம், அண்ணாமலை நகரில் இயங்கி வந்த முத்தையா நகர் வீடு கட்டும் சங்கம் கிரயம் பெற்று, அதில் முத்தையா நகர் அமைக்க, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் செங்கல்பட்டு அவர்களிடம் மனைப் பிரிவு அனுமதியும் பெறப்பட்டுள்ளது என்பதும், வழக்கு 1-வது அட்டவணையில் விவரிக்கப்பட்ட சொத்தினை வாதி 02.05.1987 தேதியிட்ட ஒரு பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் மூலம் மேற்படி சங்கத்தின் தலைவரிடம் இருந்து கிரயம் பெற்றுள்ளார் என்பதையும் நிரூபிக்கும் வகையில் மேற்படி சொத்தில் முத்தையா நகரின் மனை பிரிவிற்கான வரைபடமானது வா.சா.ஆ.3 ஆகவும், சா.சா.ஆ.1 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வாதியின் கிரய பத்திரமான 02.05.1987 தேதியிட்ட கிரய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து பி.வா.சா.1 23.08.2014 தேதிய குறுக்கு விசாரணையில்

**” இவ்வழக்கில் 1 வது அட்டவணை சொத்து மனை எண்.357-ஐ பொருத்து எனக்கு ஆட்சேபணை இல்லை. மனை எண்.357-ற்கு மேற்கே உள்ள இடத்திற்கு வழக்கு நடக்கிறது. ”**

என குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். 2 ஆம் பிரதிவாதி தரப்பிலும் மனை எண்.357-ற்கு மேற்கில் உள்ள மனை எண்.357-ஏ மனையை பொருத்தே உரிமை கோரப்பட்டுள்ளது. ஆகவே, மனை எண்.357-ஐ பொருத்தவரை 1, 2 பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதும் வாதியின் அனுபவத்தில்தான் உள்ளது என்பதும், வழக்கு விசாரணையிலிருந்து நிரூபணமாவதால் 1 ஆம் இன சொத்தை பொருத்து வாதி கோரியவாறு விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற வாதிக்கு உரிமையுள்ளது என நீதிமன்றம் தீர்மானிக்கின்றது

**12) 2 ஆம் இன சொத்திற்கான வழக்கறிஞர் வாதங்களும் சாட்சிய நிரூபணங்களும்.**

வாதி மேற்படி வீடு கட்டும் சங்கத்தில் உறுப்பினராக இருந்து வந்துள்ளார் என்பதை நிரூபிக்கும் வகையில் வாதி தரப்பில் வா.சா.ஆ.11, 12, 14 மற்றும் 16 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் 1983, 1987, 1989 மற்றும் 1992 ல் வாதியால் முத்தையா நகர் சங்கத்தில் செலுத்தப்பட்ட தொகைகளுக்கான ரசீதுகளாகும். இவை வாதி முத்தையா நகர் சங்கத்தின் உறுப்பினர் என்பதை நிரூபிக்கிறது. 2 ஆம் இன சொத்தை பொருத்து வாதி தரப்பில் வா.சா.ஆ.3 முத்தையா நகர் பகுதி முழுவதற்கான வரைபடம் தாக்கல் செய்து அதன் அடிப்படையில் மனை எண்.357- 1-வது இன வழக்கு சொத்துக்கு மேல்புறத்தில் புல எண் 103-1ஏ-ல் மேற்படி முத்தையா நகர் வீடு கட்டும் சங்கத்திற்கு பாத்தியமான இடத்தில் 1990 ம் வருடத்தில் மேற்படி சங்கத்தால் முத்தையா நகர் அனெக்ஸ் -XII என்ற மனைப் பிரிவு உருவாக்கப்பட்டு, அதற்கு பரங்கிப்பேட்டை பஞ்சாயத்து யூனியனில் 31.10.1990-ல் அங்கீகாரம் பெற்று அதில் வாதி முதலில் கிரயம் பெற்ற வழக்கு 1-வது அட்டவணை மனையின் தென்புற அளவு குறைவாகவும் மனை குறுகலான அமைப்புடனும் இருந்ததால் அந்த சொத்திற்கும் அடுத்து மேல்புறம் உள்ள மேற்படி முத்தையா நகர் அனெக்ஸ் நகரின் மனை எண்.3-ஐ கடந்த 17.06.1992 தேதியிட்ட ஒரு கிரய பத்திரம் மூலம் முத்தையா நகர் வீடு கட்டும் சங்கத்தின் தலைவரிடம் இருந்து கிரயம் பெற்றுள்ளாார் என்பதை நிரூபிக்கும் வகையில் மேற்படி கிரய ஆவணத்தின் பதிவு சான்று நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த கிரய ஆவணத்தில்

**” முத்தையா நகர் வீடு கட்டும் சங்கத்தின் இணைத்து முத்தையா நகர் அனெக்ஸ் XII என்று SR Vasudev (3) - இணைத்தும் அதை பரங்கிப்பேட்டை யூனியன் அலுவலகத்தில் ஆணையாளர் அவர்களால் அப்ருவல் எண்.A3-6740/90 தேதி <u>31.10.90-ன்</u> படி மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி முத்தையா நகர் அனெக்ஸ் XII ல் பிளாக் “B” ல் கட்டுப்பட்ட இதனடியில் கண்ட பிளாட் எண்.3, மனையை நாளது தேதியில் தங்களுக்கு ரூபாய் 10,400.00-க்கு சுத்த கிரயம் செய்து கொடுத்தும்”**

என குறிப்பிட்டே கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், 1, 2 மனைகளை கிரயம் பெற்ற 3-ஆம் நபர்களின் கிரய ஆவணங்களும் வாதி தரப்பில் வா.சா.ஆ.7, 8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேற்படி கிரய ஆவணங்களானது முத்தையா நகர் சங்கத்தின் தற்கால தலைவர் என்ற முறையில் வாசுதேவன் அவர்களால் கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி கிரய ஆவணங்களில்

” இதனடியில் கண்ட சொத்தை முத்தையா நகர் தலைவர் இராஜதுரை அவர்களிடமிருந்து முத்தையா நகர் வீடு கட்டும் சங்கத்தில 10.09.1989 ல் நடைபெற்ற பொதுக்குழுவில் தீர்மானம் 1-ன்படி 26.03.1989 ல் முத்தையா நகர் ஆஸ்தி பொறுப்புகளை ஏற்றும் முத்தையா நகர் வீடு கட்டும் சங்கத்தில் இணைத்து ......

என குறிப்பிடப்பட்டுள்ளதை பிரதிவாதி தரப்பில் சுட்டிக்காட்டி மேற்படி சங்கத்தின் முன்னால் தலைவர் வழக்கு 2-ம் இன சொத்து மற்றும் அதன் அடுத்தடுத்துள்ள மனை பிரிவுகளை ஏற்கனவே கிரயம் கொடுத்துவிட்டார் என்றும், அதன் பிறகே முத்தையா நகரில் முன்னால் தலைவரான இராஜதுரை அவர்களுக்கு எதிராக மேற்படி தீர்மானமானது 10.09.1989 ல் ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளது. வா.சா.ஆ. 2, 7, 8 முறையே 17.06.1992, 21.05.1992, 21.05.1992 ஆகிய தேதிகளில் ஏற்பட்டுள்ளன. இந்நிலையில் பி.வா.சா.ஆ.6 ல் முத்தையா நகர் வரைபடத்துடன் கூடிய 04.12.1987ல் இளங்கோவன் அவர்களால் இராஜா முத்தையா நகர் அதன் தற்கால தலைவர் இராஜதுரை என்பவரிடம் இருந்து பெற்ற கிரய சொத்து விபரமாக

சிதம்பரம் ரிடி. சிதம்பரம் சப்டி, சிதம்பரம் தாலுக்கா C. கொத்தங்குடி கிராமத்தில் நஞ்சை **”R.S. No.103/B, 103/3 முத்தையா நகரில் Plot No.357/A Extent 2720 சதுரடிக்கு (ஏ.0. செ.6.23) சக்குபந்தி முத்தையா நகர் இடத்துக்கும் கிழக்கு 30“ ரோட்டுக்கும் தெற்கு Plot No.357க்கும் மேற்கு Plot No.345க்கும் வடக்கு இதற்குள் கீழ்மேல் ஜாதியடி வடபுரம் 40 தென்புரம் 40 தென்வடல் ஜாதியடி கீழ்புரம் 68 மேல்புரம் 68 இதற்குட்பட்ட காலிமனை கிரயம், பரங்கிப்பேட்டை யூனியன் எல்லைக்குட்பட்டது மார்க்கட் மதிப்பு ரூ.10,880.00”**

என குறிப்பிட்ட சொத்து கிரயம் பெறப்பட்டுள்ளது. வாதி 1-ம் இன சொத்து மேற் குறிப்பிட்ட அதே நபரான ராஜதுரை என்பவரிடம் இருந்து கிரயம் பெற்றுள்ளார். இந்நிலையில் வழக்கு சொத்தான மனை எண்.357-ற்கு மேல்புரத்தில் 1990ல் அங்கீகாரம் பெறுவதற்கு முன்பாகவே மேற்படி சொத்துக்கள் கிரயம் கொடுக்கப்பட்டுவிட்டது என்பது தெரியவருகிறது. மேற்படி 2-ம் இன சொத்தானது 1992-ல் தான் வாதியால் கிரயம் பெறப்பட்டுள்ளது, என்பதும் சாட்சிய சான்றாவணங்களிலிருந்து நிரூபணமாகிறது. இந்நிலையில் ஏற்கனவே, டாக்டர் முத்தையா நகர் வீடு கட்டும் சங்கத்தில் தலைவராக இருந்த ராஜதுரை மூலம் வாதி மற்றும் 2-ம் பிரதிவாதியின் கிரயதாரரான இளங்கோவனும் கிரயம் பெற்று இருக்கும் நிலையில் அதன் பின்னிட்ட தேதிகளில் ஏற்பட்ட வா.சா.ஆ.17 மற்றும் 18 மனை எண்.4 மற்றும் 5-ற்கான கிரய ஆவணங்களை தாக்கல் செய்தும், வா.சா.ஆ.19 வழக்கு சொத்துக்கள் அடங்கிய சாலை பகுதியை பரங்கிபேட்டை பஞ்சாயத்துக்கு எழுதிகொடுத்த ஆவணங்களை தாக்கல் செய்தும், மேற்படி ஆவணங்கள்படி முறையாக அனெக்ஸ் 12 பிளாக் ”பி” -ல் மனை பிரிவுகளானது வாதி குறிப்பிட்ட வகையிலேயே கிரயம் கொடுக்கப்பட்டு சட்டப்படியான மனை பிரிவுகள் என்ற வாதம் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் மனை எண்.357-ற்கு மேல்புரம் நான்கு தனித்தனியான 2800 சதுரடிக் கொண்ட மனைகள் உள்ளன. அதன் தொடர்ச்சியாக மனை எண்-357 உள்ளது. அந்த 4 மனைகளும் ஏ,பி,சி,டி என பிரிக்கப்பட்டுள்ளது. முத்தையா வீடு கட்டும் சங்கத்தால் மனை எண்.357-ஏ அதன் அடுத்த மனை எண்.357 இளங்கோவன் என்பவருக்கு கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது. அவர் அதனை ராஜ்குமார் மற்றும் 2-ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்துள்ளார். 2-ம் பிரதிவாதி மனை

எண்.357ஏ-ன் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார். அந்த மனையானது 357பி-ற்கு கிழக்கிலுள்ள மனையை கங்காதரன் என்பவர் 25.11.1988-ல் கிரயம் பெற்றுள்ளார். அவரிடமிருந்து சந்தரமோகன் 12.07.1995-ல் 4 எல்லைகள் குறிப்பிட்டு கிரயம் பெற்றே அனுபவித்து வருகிறார். சந்திரமோகன் இறந்த பிறகு அவரது மனைவி சாவித்திரி இளவர் மகள் இருவரும் சேர்ந்து மனை எண்.357பி-யை 1-ம் பிரதிவாதிக்கு 23.03.2009-ல் கிரயம் கொடுத்துள்ளனர். அவ்வாறு பிரதிவாதியால் ஏற்கனவே, கிரயம் பெற்ற சொத்து தான் பின்னிட்டு புதிதாக அங்கீகாரம் பெற்றதன் அடிப்படையில் கிரயம் பெற்றதாக குறிப்பிடும் வாதியின் வாதம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. ஏனென்றால் caveat tementor என்ற லத்தின் மொழிக்கேற்ப வாங்குபவரே விழித்திருக்க வேண்டும் என்ற மொழிக்கேற்ப வாதி ஏற்கனவே கிரயம் கொடுத்த இடத்தில் மீண்டும் கிரயம் பெற்றுள்ளார் என்பதால் வாதியின் கிரயம் சட்டப்படியானது என எடுத்துக்கொள்ள முடியாது.

**<u>13) வழக்கெழு வின 1,2 மற்றும் கூடுதல் வழக்கெழு வினா 1-ற்கான தீர்வு:</u>**

மேற்கண்ட பரிசீலணையிலிருந்து 1-ம் இன சொத்தானது வாதிக்கு பாத்தியமானது என்றும். வாதியின் அனுபவத்தில் இருக்கிறது என்றும், முறையாக நிரூபிக்கப்பட்டு இருப்பதாகவும், அதே சமயத்தில் 2-ம் இன சொத்தை பொருத்து வாதியின் உரிமை மூலம் அனுபவம், நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்திருப்பதால், வாதி கோரியவாறு 2-ம் இன சொத்தை பொருத்து விளம்புகையோ, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமோ பெற வாதிக்கு உரிமை இல்லை எனவும், வழக்கெழு வினக்காளுக்கு தீர்வுக்காணப்படுகிறது.

**<u>14) கூடுதல் வழக்கெழு வினா 2-ற்கான தீர்வு:</u>**

2. நீதிமன்ற கட்டணத்தை பொருத்து வழக்கு சொத்து முறையாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா?

நீதிமன்ற கட்டணத்தை பொருத்து பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரையில் ஆட்சேபணை செய்திருந்த போதும், மேற்படி சொத்திற்கான முறையான சந்தை மதிப்பை நிரூபிக்கும் வகையில் சாட்சிய சான்றாவணங்கள் முன்னிலை படுத்தாதநிலையில் மேற்படி பிரதிவாதியின் ஆட்சேபணையானது ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல என வழக்கெழு வினாவிற்கு தீர்வுக்காணப்படுகிறது.

**<u>15) கூடுதல் வழக்கெழு வினா 3-ற்கான தீர்வு:</u>**

3. இந்நீதிமன்றத்திற்கு இவ்வழக்கை விசாரிக்க அதிகாரம் உள்ளதா?

அசல் வழக்கானது ஆதியில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட போதும் பின்னிட்டு 2-ம் இன சொத்தை பொருத்து விளம்புகை பரிகாரம் கோரி வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் வழக்கு

சொத்தின் மதிப்பின் அடிப்படையில் இவ்வழக்கினை விசாரிக்க இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரை அதிகாரம் இல்லை என பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை செய்திருந்த போதும், மேற்படி சொத்திற்கான முறையான சந்தை மதிப்பை நிரூபிக்கும் வகையில் சாட்சிய சான்றாவணங்கள் முன்னிலை படுத்தாத நிலையில் மேற்படி பிரதிவாதியின் ஆட்சேபணையானது ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல என வழக்கெழு வினாவிற்கு தீர்வுக்காணப்படுகிறது.

**<u>16) வாதிக்கு கிடைக்க கூடிய வேறு பரிகாரம் யாவை?</u>**

வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டும் வேறு பரிகாரங்கள் எதுவும் வாதிக்கு வழங்கப்பட தேவையில்லை என்று எழுவினா எண்.3-ற்கு அவ்வாறே விடை காணப்படுகிறது.

**<u>17) தீர்வின் சாராம்சம்</u>**

மேற்கண்ட பரிசீலனையிலிருந்து 1-ம் இன சொத்தானது வாதிக்கு பாத்தியமானது என்றும். வாதியின் அனுபவத்தில் இருக்கிறது என்றும், முறையாக நிருபிக்கப்பட்டு இருப்பதாகவும், அதே சமயத்தில் 2-ம் இன சொத்தை பொருத்து வாதியின் உரிமை மூலமும் அனுபவமும், நிருபிக்கப்படவில்லை என்பதால், வாதி கோரியவாறு 2-ம் இன சொத்தை பொருத்து விளம்புகையோ, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமோ பெற வாதிக்கு உரிமை இல்லை எனவும், முடிவு செய்யப்பட்டுள்ளது.

**18)** இறுதியில் அசல் வழக்கானது கீழ்கண்டவாறு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

முதல் இன வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியமானது என விளம்புகை செய்தும், அதில் வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும், பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ, முகவர்களோ எவ்விதத்திலும் இடையூறு செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும்,

இரண்டாம் ஆம் இன சொத்தை பொறுத்து அசல் வழக்கை தள்ளுபடி செய்தும்,

அவரவர் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்க வேண்டும் என உத்தரவிட்டும் தீர்ப்புரை பகரப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தர்-தட்டச்சரிடம் நேரில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2017-ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 27-ஆம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சிதம்பரம்.**

**<u>வாதி தரப்பு சாட்சி:-</u>**

வா.சா.1. திரு. பழனியப்பன்
வா.சா.2. திருமதி. பானுமதி
வா.சா.3. திரு. கார்த்திகேயன்
வா.சா.4. திரு. மோகன்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

1. வா.சா.ஆ.1: 02.05.1987-ம் தேதியிட்ட கிரயம் பெற்ற கிரயப் பத்திரத்தின் பதிவு சான்றிட்ட நகல்

2. வா.சா.ஆ.2: 17.06.1992-ம் தேதியிட்ட கிரயப் பத்திரத்தின் பதிவு சான்றிட்ட நகல்

3. வா.சா.ஆ.3: முத்தையா நகரின் வரைபடம் நகல்

4. வா.சா.ஆ.4: 30.10.1990-ம் தேதியிட்ட முத்தையா நகர் (அனெக்ஸ்-VII) நகல்

5. வா.சா.ஆ.5: முத்தையா நகரின் மனை பிரிவின் புகைப்படம் மற்றும் நெகடிவ் சி.டி

6. வா.சா.ஆ;6 சிதம்பரம் வட்டாட்சியர் அனுப்பிய கடிதம் அசல்

7. வா.சா.ஆ.7: 21.05.1992-ம் தேதியிட்ட கிரயப் பத்திரத்தின் பதிவு சான்றிட்ட நகல்

8. வா.சா.ஆ.8: 21.05.1992-ம் தேதியிட்ட கிரயப் பத்திரத்தின் பதிவு சான்றிட்ட நகல்

9. வா.சா.ஆ.9: 13.09.2004-ம் தேதியிட்ட கிரயப் பத்திரத்தின் நகல்

10. வா.சா.ஆ.10: 20.07.1982-ல் ராஜா முத்ததையா நகர் உறுப்பினர் கட்டணம் செலுத்திய ரசீது அசல்

11. வா.சா.ஆ.11: 12.08.1983-ல் ராஜா முத்தையா நகர் மனைக்கு கட்டணம் செலுத்தியதற்கான ரசீது அசல்

12. வா.சாஆ.12: 29.01.1987-ல் இராஜா முத்தையா நகர் மனைக்கு செலுதிய ரசீது அசல் எண்ணிக்கை -4

13. வா.சா.ஆ.13: 02.05.1987-ல் தேதியிட்ட கிரய பத்திரம் அசல்

14. வா.சா.ஆ.14: 29.09.1989-ல் இராஜா முத்தையா நகர் வளர்ச்சி கட்டணம் இந்தியன் வங்கியில் செலுத்தியதற்கான ரசீது அசல்

15. வா.சா.ஆ.15: 02.05.1992-ல் இராஜா முத்தையா நகர் வீடு கட்டும் சங்கத்திற்கு வங்கி கணக்கில் ரூ.14000-ம் செலுத்தியதற்கான வங்கி ரசீது அசல்

16. வா.சா.ஆ.16: 17.06.1992-ல் தேியிட்ட கிரய பத்திரத்தின் பதிவு சான்று நகல்

17. வா.சா.ஆ.17: 30.07.1992-ல் சுகுமார் அவர்களின் கிரய பத்திரம் பதிவு சான்று நகல்

18. வா.சா.ஆ.18: 21.05.1992 அருணா வெங்கடாசலம் அவர்களின் கிரய பத்திரம் பதிவு சான்று நகல்

19. வா.சா.ஆ.19: 30.01.1992-ல் பரங்கிபேட்டை வட்டார வளர்ச்சி அலுவலருக்கு முத்தையா நகர் வீடு கட்டும் சங்கத்தலைவர் எழுதி கொடுத்த தான பத்திரம் பதிவு சான்று நகல்

20. வா.சா.ஆ.20: 01.01.1987 முதல் 16.06.2004 வரை வழக்கு சொத்திற்க்கான வில்லங்க சான்றிதழ் அசல்

21. வா.சா.ஆ.21: 25.10.2016 சிதம்பரம் வட்டாச்சியர் அலுவலகத்திலிருந்து வந்த கடிதம் அசல்

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி:-</u>**

பி.வா.சா.1. திரு. பாலசுப்ரமணியம்
பி.வா.சா.2. திரு.ராஜ்குமார்
பி.வா.சா.3. இளங்கோவன்

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

பி.வா.சா.ஆ.1. 25.11.1988-ம் தேதியிட்ட ராதாகிருஷ்ணன் கங்காதரனுக்கு எழுதி கொடுத்த கிரய பத்திரம் அசல்

பி.வா.சா.ஆ.2 12.07.1995-ம் தேதியிட்ட கங்காதரன், சந்திரமோகன் என்பவருக்கு எழுதிக் கொடுத்த கிரய பத்திரம் அசல்

பி.வா.சா.ஆ.3 23.03.2009-ம் தேதியிட்ட சாவித்திரி வகையறா 1 ஆம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரய பத்திரத்தின் அசல்

பி.வா.சா.ஆ.4 01.01.1987 வில்லங்க சான்றிதழ் அசல்

பி.வா.சா.ஆ.5 01.01.1987 முதல் 12.07.2009 வரை காலத்திற்கான வில்லங்க சான்றிதழ் அசல்

பி.வா.சா.ஆ.6 04.12..1987-ம் தேதியிட்ட கிரய பத்திரம் அசல்

பி.வா.சா.ஆ.7 14.08.2003-ம் தேதியிட்ட கிரய பத்திரத்தின் அசல்

பி.வா.சா.ஆ.8 வழக்கு சொத்து சம்பந்தப்பட்ட வில்லங்க சான்றிதழ் அசல்

கூ.மா.உ.நீ
27.06.2017